1987 நவம்பர் 17]

காரணத்தால், மேலும் இப்படிப்பட்ட கட்டிடங்களை பெரிய குளத்தில் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையின் அடிப்படையில், நிதியாதார வரம்பிற்குட்பட்டு அரசு இதைப் பரிசீலிக்கும்.

குடிசை மாற்று வாரிய வீடுகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு.

161—(*வினா எண் 8175) திரு. க. பாரமலை : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியத்தினால் கட்டுப்படும் வீடுகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எத்தனை சதவீதம் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன?

(ஆ) அதன்படி சென்னை மற்றும் மதுரையில் தாழ்த்தப் பட்ட மக்களில் எத்தனை பேருக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படும் வீடுகள், அந்தப்பகுதியில் ஏற்கெனவே வசித்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் உட்பட அனைத்து குடிசைவாசிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. எனவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கென தனியே குறிப்பிட்ட சதவீதம் வீடுகள் ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக ஏற்கெனவே இருந்த குடிசை வீடுகளுக்குப் பதிலாகத்தான் புதிதாகக் கட்டப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகப் புதிதாகக் குடியிருப்புகள் கட்டு கிறபோது அதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று இந்தனை சதவீதம் என்று பிரித்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்றுவாரியம் குடியிருப்புகளைப் புதிதாகக் கட்டுகிறபோது, யார் யார் அந்தப் பகுதியில் குடிசைகளில் வாழ்ந்தார்களோ அவர்களைக் குடியமர்த்தத்தான் குடிசை மாற்று வாரியம் வீடுகளைக் கட்டித் தருகிறது. அப்படிக் கட்டித் தரும்போது ஏற்கெனவே அந்தப் பகுதியில் யார் யார் வாழ்ந்தார்களோ—அவர்கள் ஆதிதிராவிடர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி—அவர்கள்தான் குடிசைமாற்று வாரியத்தால் அங்கே கட்டப்பட்ட புதிய வீடுகளில் குடியமர்த்தப்படுகிறார்கள். தனியாக ஆதிதிராவிடர்களுக்கு இத்தனை சதவீதம் என்று ஒதுக்கீடு இல்லை. அவர்களுக்கு தாட்கோ மூலமாகவும் மற்ற பிற அமைப்புகள் மூலமாகவும் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப்பகுதிகளில் கட்டப்படுகிற குடியிருப்புகள் சொந்தமாக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தப் பணி எப்போது நடைபெறும்? அதற்கான கொள்கை முடிவினை அறிவித்தாகி, பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டாகிவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

திருப்பத்தூர் நகரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.

162—(*வினா எண் 9621) திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் நகரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?